

வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட வரட்டுக்கரைப் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராமசாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் ஓலப்பாளையம் முதல் மொட்டக்காடு வரையிலும், மேட்டுக்காட்டுவலசு முதல் வரட்டுக்கரை வரையிலும் ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்டத் துணைச் செயலாளர் ராசி முத்துக்குமார், வெள்ளக்கோவில் ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகர், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், பேரூர்க் கழகச் செயலாளர் செண்பகம் பாலு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகனசெல்வம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.கே.ரவிச் சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் . நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸ் பகுதியில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தினை ரூ.40.11 இலட்சம் செலவில் மறுசீரமைப்பு செய்யப்பட்ட கட்டிடங்களில் உள்ள 15கடைகளை புதிய வழிகாட்டி நெறிமுறையின்படி தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்களிடம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் உதகை சட்ட மன்ற உறுப்பினர், மாவட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# சிறப்பு மெகா கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் – ஆ.ராசா எம்.பி. சிறப்புரை!

நீலகிரி, ஜூன் 30-

நீலகிரி மாவட்டத்தில், கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மசினகுடி ஊராட்சி பகுதியில் நடைபெற்ற சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாமினை, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா ஆகியோர் தொடங்கி வைத்து பல்வேறு அரங்குகளை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு:

இம்முகாமில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

ஏழை, எளிய மக்கள் தங்களது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில், காலம் முழுவதும் மக்களுக்காக பணியாற்றிய மகத்தான மனிதர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் 3 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. அவரை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர், ஓராண்டு காலம் தமிழகம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும், பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திடவும் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில், நமது மாவட்டத்தில், பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மசினகுடி மற்றும் கூடலூர் வட்டம் தேவர் சோலை ஆகிய கிராமங்களில் 27.06.2023 மற்றும் 12.07.2023 ஆகிய தேதிகளில் நடத்தப்பட திட்டமிடப்பட்டு இன்றைய தினம் கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மசினகுடி பகுதியில் "சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்று கொண்டிருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்கின்ற நேரத்தினை தவிர்த்து, இடைப்பட்ட நேரங்களில் கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் வருமானத்தினை பெருக்கி வருகின்றனர்.

இன்று மிகச்சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கும் இம்முகாம்களில், ஆண்மை நீக்கம், நோய் வாய்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசி போடுதல், இலவச செயற்கை முறை கருவூட்டல், சிறு அறுவை சிகிச்சை, தடுப்பூசி போடுதல், மலட்டு தன்மை நீக்க சிகிச்சை, சினை பரிசோதனை போன்ற சிறு அறுவை சிகிச்சைகளும், இலவச தாது உப்பு கலவை வழங்குதல், கே.சி.சி கடன் அட்டை வழங்குதல், விவசாய கடன் மேம்பட்ட பால் உற்பத்தி பற்றி கலந்துரையாடல், சிறந்த கால்நடை வளர்ப்பவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட உள்ளது.

நமது மாவட்டத்தில் இதுவரை சுமார் 160 சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டதில் 67,827 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன. காப்பீட்டு திட்டத்தின் கீழ் 1,062 கால்நடைகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளன. கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ், புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் மூலம் 40,000 அசீல் இன நாட்டு கோழிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய செயற்கை கருவூட்டல் திட்டத்தின் மூலம் 24,739 கால்நடைகளுக்கு இலவசமாக செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 1,034 விவசாயிகளுக்கு கே.சி.சி.கடன் அட்டைகளும், ரூ.49 இலட்சத்தில் 120 மகளிர் பால் உற்பத்தியாளர்களுக்கு சாண எரிவாயு அடுப்பு மற்றும் கலன்களும், பால் உற்பத்தியாளர் சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.63 இலட்சம் மதிப்பில் மானிய விலையில் கலப்பு தீவனம் மற்றும் விதைகளும், 2022-2023 சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் ரூ.18 இலட்சம் மதிப்பில் ஐஸ்கிரீம் விநியோக வாகனம் மற்றும் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு மேற்கூரை அமைக்க ரூ. 22 இலட்சமும் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் கடந்த இரண்டு ஆண்டு காலங்களில் வழங்கப்பட்டுள்ளது.

இதே போன்று ஒவ்வொரு துறையின் வாயிலாக பல்வேறு திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசால் அறிவிக்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் பெற்று பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

**ஆ.ராசா எம்.பி. பேச்சு!**

இம்முகாமில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா தெரிவித்ததாவது:

கலைஞரின் நூற்றாண்டு விழாவினை தொடர்ந்து, அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டும், பல்வேறு நலத்திட்ட உதவிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இன்றைய தினம் பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மசினகுடி ஊராட்சி பகுதியில் சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டு காலமாக நீலகிரி 200 என்ற தலைப்பில், உதகை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லீவன் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.10 கோடி சிறப்பு நிதி ஒதுக்கிடு செய்தார்கள். அதனை தொடர்ந்து, பல்வேறு கலை நிகழ்ச்சி மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. கலைஞரின் திட்டங்களை நினைவு கூரும் வகையில் இதுபோன்ற விழாக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதியை ஏற்படுத்தி தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் 70 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தினை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் பணியாற்றியவர் கலைஞர் . அவர்களை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுவதே இந்த கலைஞர் நூற்றாண்டு விழாவாகும்.

நேற்றைய தினம் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற பணிகள் ஆய்வு மேற்கொண்டதில், நமது மாவட்டத்தில் சுமார் ரூ.250 முதல் ரூ.300 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் மாவட்டத்தில் இதுபோன்ற வளர்ச்சி பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதனை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர், விவசாயிகளுக்கு ஜே 225 இராமலிங்கா பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தாட்கோ உதவியுடன் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் 23

கறவை மாட்டு கடன் 30 சதவிகித மானியத்துடன் தலா ரூ.80,000/ வீதம் 23 பயனாளிகளுக்கும், ஈ.டி.553 கப்பச்சி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தாட்கோ நிதியுதவியுடன் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் கறவை மாட்டுக்கடன் 30 சதவீதம் மானியத்துடன் தலா ரூ.1.10 இலட்சம் வீதம் 10 நபர்களுக்கும், தாட்கோ திட்டத்தின் மூலம் துவங்கப்பட்ட ஆனைக்கட்டி மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 100 சதவீதம் மானியத்தில் பால் கேன்களும், ஜே 200 மசினகுடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் 7 உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி மூலம் 7 விவசாயிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் கறவை மாட்டுக்கடன் உதவிகளையும், ஜே 200 மசினகுடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை சார்ந்த 7 உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி மூலம் கே.சி.சி திட்டத்தின் மூலம் தலா ரூ.14,000/ வீதம் கறவை மாடுகள் பராமரிப்புக்கடனுதவிகளையும், ஜே 67 கூடலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினை சார்ந்த 7 நபர்களுக்கு நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வாயிலாக தலா ரூ.50,000/ வீதம் கறவை மாட்டு கடன் உதவிகளும், ஜே 67 கூடலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் 348 உறுப்பினர்களுக்கு (01.04.2022 முதல் 28.02.2023 வரை) சங்கத்திற்கு வழங்கிய மொத்தம் 8,38,857.500 லிட்டர் பாலுக்கு 1 லிட்டருக்கு ரூ.7 வீதம் மொத்தம் ரூ.58,72,002.50 கூடுதல் கொள்முதல் விலைக்கான ஆணையினை சங்கத்தின் செயலாளர் அவர்களிடம் வழங்கினார்கள்.

முன்னதாக, ஜமாபந்தியில் பெறப்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகளின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், உதகமண்டலம், மூலம் நாடுகாணியிலிருந்து கூடலூர், தெப்பக்காடு பொக்காபுரம் வழிதடத்தில் கூடுதலாக ஒரு முறை பேருந்து இயக்கும் சேவையினை, சுற்றுலாத்துறை அமைச்சர் , நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர், கொடியசைத்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இம்முகாமில், மாவட்ட ஊராட்சித்தலைவர் மு . பொன்தோஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.பகவத் சிங், இணை இயக்குநர்/ பொதுமேலாளர் (ஆவின்) ஜெயராமன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பொது மேலாளர் நடராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி (கூடலூர்), நகர்மன்ற தலைவர்கள் திருமதி. வாணீஸ்வரி (உதகை), திருமதி.பரிமளம் (கூடலூர்), ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), திருமதி.கீர்த்தனா (கூடலூர்), மசினகுடி ஊராட்சி தலைவர் திருமதி.மாதேவி மோகன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், முன்தினம் (28.6.2023) நேற்று ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் ஜி.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு

# ரூ.171 கோடி நிலுவைத் தொகை வழங்க அரசாணை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜூன் 30-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு கொரோனா பெருந்துயர் காலத்தில் முழு அடைப்பின் போது தன்னுயிரையும் கருதாமல் பணிபுரிந்த தொழிலாளர்களை சிறப்பிக்கும் வகையில், சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.17.15 கோடியும், 14வது ஊதிய ஒப்பந்தத்தின்படி ஊதிய நிலுவைத் தொகையான ரூ.171.05 கோடி வழங்க ஆணைகள் பிறப்பித்துள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணி புரிந்து வரும் 1.14 லட்சம் பணியாளர்களால், தினமும் 20,111 பேருந்துகள் வரை தமிழ்நாடு முழுவதும், அண்டை மாநிலங்களான புதுச்சேரி, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கும் மக்களின் போக்குவரத்திற்காக இயக்கப்பட்டு 1.70 கோடி பயணிகள் தினமும் பயன் பெறுகின்றனர்.

கொரோனா பெருந்துயர் காலமான 2020, 2021 ஆம் ஆண்டுகளில் மக்களின் உயிர்காக்கும் பொருட்டு அமல்படுத்தப்பட்ட முழு அடைப்பின் போது, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தியாவசியான பேருந்து சேவைகளுக்காக, பேருந்துகளை இயக்கின. அப்போது, போக்குவரத்துப் பணியாளர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது பணிபுரிந்தனர். அவ்வாறு பணிபுரிந்த தொழிலாளர்களை கௌரவிக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.17.15 கோடி வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா காலத்திற்கு பின், போக்குவரத்துக் கழகங்கள் கடும் நிதி நெருக்கடியில் இருந்த போதிலும், தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, 14 வது ஊதிய ஒப்பந்தத்தை 01092019 முதல் அமல்படுத்தி, ஊதிய உயர்வு அளித்து, அதன்படி தற்போது ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஜனவரி 2022 முதல் ஜூலை 2022 வரை உள்ள காலத்திற்கான ஊதிய நிலுவைத் தொகையான ரூ.171.05 கோடி வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.


### தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!
# கலைஞரின் திரைப்படங்கள் இலவசமாக திரையிடல்!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பிலும் மற்றும் கும்பகோணம் வாணி விலாச சபாவின் சார்பிலும் விஜயலெட்சுமி திரையரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 65 ஆண்டுகால திரை பயணத்தில் ராஜகுமாரி முதல் பொன்னர் சங்கர் வரை உள்ள 74 திரைப்படங்களை வாரம் ஒரு திரைப்படம் வீதம் திரையிடுவதுடன் ஒரு நாள் இலவசமாக தொடர்ந்து அனைத்து படங்களும் திரையிடப்பட உள்ளதால் அத்திரைப்படங்களின் உரிமைகளை பெற்றுள்ளவர்கள் மற்றும் அது சம்பந்தமாக தொடர்புடையவர்கள் அத்திரைப்படங்களை திரையிடுவதற்கான உரிமையை பெறுவதற்கான நடைமுறைகளை தெரியப்படுத்துமாறும், மேலும், தங்களிடம் முறைப்படி நாங்கள் அனுமதி பெற்று படங்களை திரையிடுவதற்கு உதவிடுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**சு.கல்யாணசுந்தரம் எம்.பி.** செயலாளர்,
வாணி விலாச சபா
மாவட்ட கழகச் செயலாளர்
தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க.

**க.அன்பழகன் எம்.எல்.ஏ.**
தலைவர்
வாணி விலாச சபா.
குடந்தை சட்டமன்ற தொகுதி.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன்**

**ஜூன் 30 (2015)**



கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**